**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 211/2023**
திரு. பழனிசாமி (D.W –1) **02.12.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து தொங்குட்டி பாளையத்தில் உள்ளது என்றால் சரி. காசா எண் 378/1 முதலில் தங்கமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் ஆமாம். அதன் பிறகு அந்த சொத்துக்களை அவருடைய வாரிசுதாரர்கள் பிரித்துக் கொண்டார்கள் என்றால் ஆமாம். க.ச.எண்.378/1, க.ச.எண்.378/1 ஏ, க.ச.எண்.378/1 பி, க.ச.எண்.378/1 சி என்று உட்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. க.ச.எண்.378/1 ஏ நாச்சிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். க.ச.எண்.378/1 பி பழனிசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். க.ச.எண்.378/1 சி துரைசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம்.

2. அசல் வழக்கு எண் 323/2010 தாக்கல் செய்யப்பட்ட பிறகு துரைசாமியின் மகன் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.458/2010 தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அந்த வழக்கில் நான் ஒன்பதாம் பிரதிவாதியாக இருந்தேன் என்றால் ஆமாம். அதில் நான் எதிர் உரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. க.ச.எண்.378/1 சி கீழ புற பகுதி என்றால் ஆமாம். அதற்கு மேல் புறம் உள்ள சொத்து க.ச.எண்.378/1 பி என்றால் ஆமாம் . அதற்கு மேல் புறம் உள்ள சொத்து க.ச.எண்.378/1 ஏ என்றால் ஆமாம்.

3. நான் பி.வா.சா.ஆ–1 ன் படி நடுப்பகுதி சொத்தான க.ச.எண்.378/1 பி கிரையமாகப் பெற்றுள்ளேன் என்றால் சரி. பி.வா.சா.ஆ–1 கிரைய காலத்தில்

போது கிழபுறபகுதி துரைசாமிக்கும், மேற்கு புறப்பகுதி நாச்சிமுத்துவர்க்கும் பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரி. பி.வா.சா.ஆ–1 படி கிரயம் பெற்ற பிறகு அந்த சொத்தை நான் அனுபவம் செய்து வந்தேன் என்றால் சரி. வாழை பயிர் செய்தேன். அதன் பிறகு பி.வா.சா.ஆ–2 ன் படி 1984 ஆம் வருடம் க.ச.எண்.378/1ஏ மேல்புறப் பகுதியை கிரயமாகப் பெற்றேன் என்றால் சரி. அதன் பிறகு அந்த ஆவணத்தில் துரைசாமி சாட்சி கையொப்பம் செய்துள்ளதாக சாட்சி தனிச்சியாக முன்வந்து கூறுகிறார்.

4. மேல்புற பகுதி சொத்தின் வழியாகத்தான் நடுப்புற பகுதிக்கு சென்று நான் விவசாயம் செய்து வந்தேன் என்றால் தவறு. அவர்களுக்கு பாதையே கிடையாது. எதிர்புறம் உள்ள பூமியில் இருந்து வந்து சொத்துக்கள் அனுபவம் செய்தேன் என்று சாட்சி தனிச்சியாக முன் வந்து கூறுகிறார். 1980 ஆம் வருடம் சொத்துக்களை கிரையம் பெற்ற போது ஆவணங்களை படித்து பார்த்து கிரயம் பெற்றேன் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ–1 கிரைய ஆவணத்தில் மாமுல் தடை பாத்தியமும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் மாமுல் தடை பாத்தமே பூமியில் இல்லை.

5. பி.வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தில் மேற்படி பூமியில் மாமூல் தடைபாத்தியமும் மாவடை தடைபாத்தியமும சகிதமும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் ஆவணத்தில் உள்ளது. க.ச.எண்.378/1சி சொத்து விவசாயம் செய்ய முடியாத சொத்தாக இருந்தது என்றால் அந்த சொத்து முழுவதும் பாறையாக இருந்தது அதை அவர் குவாரி மூலம் நடத்தி வந்தார் என்றால் தவறு. துரைசாமி மாவட்ட ஆட்சியரிடம் முறையாக அனுமதி பெற்று க.ச.எண்.378/1சி சொத்தை குவாரி மூலம் பாறைகளை உடைத்து பணி செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது.

6. அ.வ.எண்.323/2010 வழக்குரையில் விவசாய பூமிக்காக பயன்படுத்தி வருவதாகவும் தொழிற்சாலைக்காக பயன்படுத்த முடியாது என்று சொல்லி உள்ளதால் அதில் பாதை உள்ளது என்றுதான் கருத வேண்டும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. அ.வ.எண்.323/2010 ல் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் கடப்பாத்தியம் இல்லை என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று தான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த தாவாவில் தடைபாத்தியத்தை பொறுத்து வாதிகள் விளும்புகை பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

7. நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையில் சொத்துக்களில் பாதை இருப்பதாகவும் வாதி வியாபாரம் நடந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தவறு. அவ்வாறு பூமியில் இல்லை நீதிமன்ற ஆணையாளர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்வேனா என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த தாவா முதலில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது வாதி கோரிய தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரத்தின் இடைக்கால மனு

எண்.1254/2010 ல் இரு தரப்பினரும் அந்தசமயம் பூமியில் உள்ள நிலையை தொடர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரனை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.12.02 18:37:45 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.